

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் அப்பம்பட்டில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின்103வது பிறந்தநாள் விழாவில்.விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,துணைச் சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அப்பம்பட்டில்

# கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா - செம்மொழி நாளாகக் கொண்டாட்டம்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு! ஒன்றியச் செயலாளர் விஜயகுமார் தலைமை!

செஞ்சி, ஜூன் 5-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா அப்பம்பட்டு கூட் ரோட்டில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் தலைமையில் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டுஅமைதி ஊர்வலமாக சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஏழை எளிய பொதுமக்களுக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் பிரெட்,பிஸ்கட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில்துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர்அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர்மணிவண்ணன்,ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், வாசு, இக்பால்,குமார், செல்வமணி,மதியழகன், ரவி, கோடீஸ்வரன்,அன்வர், மாத்தூர் தாஸ்,முன்னாள் கவுன்சிலர் ரேவதி கணேசன்,ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர், தனலட்சுமி அன்பழகன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி,வழக்கறிஞர் அரவிந்தராஜ்,நிர்வாகிகள் சிவக்குமார,ஏன் ஜி சரவணன், மணிமாறன், வெங்கடேசன், சுப்பரமணி, சேகர், இளைஞர் அணி அமைப்பாளர் ஜம்போதி பழனி,துணை அமைப்பாளர் செஞ்சி பழனி, செந்தில், கோனை, அப்பம்பட்டு நிர்வாகிகள் காந்தி, முஜீர், முரளி, வசந்த், தனபால், லூர்து, பாரூக், அல்லி முத்து, வெங்கடேசன், கோனை ராஜா, நரசிம்மன், உள்ளி ட்டோர் கலந்துகொண்டனர்.

### வேலூர் மாவட்டம் – காட்பாடி தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்ட பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி., அன்னதானம் வழங்கினார்!

வேலூர், ஜூன் 5-

வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு பகுதி தி.மு.க சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா காட்பாடியில் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வேலூர் மாநகராட்சி துணை மேயரும், காட்பாடி தெற்கு பகுதி செயலாளருமான எம். சுனில்குமார் தலைமை தாங்கினார்.

தலைமை கழக பேச்சாளர் கே.ஏ.கண்ணன், வட்ட செயலாளர்கள் சசிகுமார், சம்மந்தம், இளங்கோ, ராஜி, மாநகராட்சி கவுன்சிலர்கள் ரஜினி, சரவணன், சரண்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கலந்து கொண்டு சித்தூர் பஸ் நிலையத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி உருவப்படத்திற்கு மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் நரசிம்மன், வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா, காந்திநகர் பகுதி செயலாளர் என். பரமசிவம், ஒன்றிய செயலாளர் எஸ்.சரவணன் பொதுக்குழு உறுப்பினர் வி.தயாநிதி, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மாநகராட்சி கவுன்சிலர்கள் ஆர். கே.அன்பு, ரவிக்குமார், சித்ரா லோகநாதன், ஒன்றிய அவைத்தலைவர் ராஜா உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து துணை மேயர் எம்.சுனில்குமார், 6,8,11,12,13 ஆகிய வார்டுகளில் கழிஞ்சூர், சில்க்மில், மதிநகர்,1வது மண்டல அலுவலகம் அருகில், பழைய காட்பாடி ஆகிய இடங்களில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கினார்.

### எஸ்.அன்புச்செழியன் தலைமையில் - கோவை மாநகர் மாவட்ட

# தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## மூத்த வழக்கறிஞர்கள் கே.எம்.தண்டபாணி - பி.ஆர்.அருள்மொழி பங்கேற்பு!

கோவை, ஜூன் 5-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் எஸ். அன்புச்செழியன் தலைமையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்பு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி,பட்டாசு வெடித்தும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். அன்புச்செழியன் தலைமையில் தி.மு.க.சட்டத்துறை மாநில இணைச் செயலாளர்கள் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மூத்த வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, ஆகியோர் முன்னிலையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் கலைஞர் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பட்டாசு வெடித்தும்,பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்பு வழங்கியும் 03.06.2026 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர் அணி தலைவர் கனகராஜ், மூத்த வழக்கறிஞர் கணேஷ்குமார், துணைத் தலைவர் மணிவேல், துணை அமைப்பாளர்கள் சலாவுதீன், விக்ரம், எலிசபெத்ராணி, மதிவாணன், ஜி.ராஜன், ரத்தினகுமார், மற்றும் முன்னாள் அமைப்பாளர்கள் ஜி.டி.ராஜேந்திரன், மயில்வாகனன், வழக்கறிஞர்கள் ராஜப்பன்,

எஸ்.ரவிச்சந்திரன், முனீர், சலீம், அன்வர்தீன், ஜியா உல் ஹக், அபுதாஹிர், ரவீந்திரன்,

அரசு வழக்குரைஞர்கள் வி.ரவிச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, முத்துவிஜயன், நிஜலிங்கப்பா, ராஜமாணிக்கம், பி.விஜயகுமார், மற்றும் கர்ணன், ஆர்.முத்துகுமார், பி.முத்துகுமார், எம்.தர்மராஜ், பரமேஸ்வரன், குணசேகரன், தமிழ்செல்வன், மனோகரன், சுந்தர்ராஜன், சௌந்தர்ராஜன், தீபக்மது, மணிமாறன், ஈஸ்வரன்,

வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இளங்கோ, வெற்றி, ராஜேஷ்குமார், கோகிலவாணி, மற்றும் அமுல்ராஜ், முருகானந்தம், கே. மோகன், பாண்டிக்குமார், ஸ்டேன்லி ராஜ்குமார், தமிழ்செல்வி, மணிமேகலை, ஜீவா, லலிதா, மகேஸ்வரி, திவ்யபாரதி, தோழமை கட்சிகளின் வழக்கறிஞர்கள் ஜோதி,மாசே துங்க், கோபால் சங்கர், வெண்மணி, சீலா ராஜன், சக்திவேல் உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள்,மகளிர் வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள் என 300க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



காணை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்பு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கினார், நிகழ்ச்சியில் ஜெயச்சந்திரன் வழக்கறிஞர் கல்பட்டு வி.இராஜா, திருமதி என்.கலைச்செல்வி கே.சிவக்குமார் மாநில பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி என்.ஏழுமலை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா:

# காணை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி வழங்கினார்!

விழுப்புரம், ஜூன் 5-

நவீன தமிழ்நாட்டின் சிற்பி சமூக நீதி காவலர், முத்தமிழ் அறிஞர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று காணை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் காணை கடைவீதியில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்பு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கினார், நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் ஜெயச்சந்திரன் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் கல்பட்டு V.இராஜா, ஒன்றியக்குழு பெருந்தலைவர் திருமதி N.கலைச்செல்வி மாவட்ட கவுன்சிலர் K.சிவக்குமார் மாநில பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி N.ஏழுமலை ஒன்றிய கழக நிர்வாகிகள் பழனி,செல்வம், நாராயணசாமி, சக்கரவர்த்தி, மதன், புனிதா அய்யனார்,சிவராமன்,பாரதி நாகராஜ் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரங்கநாதன்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஐயப்பன்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி கதிரவன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் குமரன், மணியரசன், ராமகிருஷ்ணன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் கலைமணி,குணசீலன் ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கணபதி உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கிளை கழக செயலாளர்கள் கணேசன், கிருஷ்ணன், குமரன், ஏழுமலை, லிங்கப்பன்,நாகு அரிகிருஷ்ணன், சக்கரவர்த்தி, பரசுராமன், கார்த்தி,பழனி, அன்பழகன், சுப்ரமணி,மாய கிருஷ்ணன், செந்தில்,புஷ்பராஜ், சத்தியராஜ்,முனியப்பன், மற்றும் BLA2 BLC உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாநகர் முழுவதும்

# கலைஞர் 103வது பிறந்த நாள் விழா - நல உதவிகள்!

## மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் – கழக முன்னோடிகள் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜூன் 5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளையொட்டி, மக்களுக்கு தேவையான நலஉதவிகளுடன் திருவண்ணாமலை மாநகர் முழுவதும் கொண்டாடப்பட்டது. மாநகர செயலாளர் ப. கார்த்தி வேல்மாறன் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

03.06.2026 புதன்கிழமை, காலை திருவண்ணாமலை மாநகரில் முத்தமிழஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு ஊர்வலமாக சென்று மாலை அணிவித்தப் பின், மாநகர் முழுவதும் வார்டு, வார்டாக அவரது பிறந்த நாள் விழா நடைபெற்றது.

காலை 9.45மணிக்கு, சிட்கோ போக்குவரத்து பணிமனையில், க.சௌந்தரராசன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கல், காலை 10.00மணிக்கு, பகுதி செயலாளர் அ.கோவிந்தன் ஏற்பாட்டில் பச்சையம்மன் கோயில் அருகில் அறுசுவை உணவு வழங்கல், காலை 10.15 மணிக்கு அறிவொளி பூங்கா அருகில் செ.எழில்மாறன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கல், காலை 10.30மணிக்கு, அனைத்து அமைப்புசாரா மாநில பிரச்சார செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம் அவர்களின் ஏற்பாட்டில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலஉதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கல், காலை 10.45மணிக்கு, பகுதி செயலாளர் சு.விஜி(எ) விஜயராஜ் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கல், காலை 11.00மணிக்கு, சின்னக்கடை தெருவில், மாவட்ட பிரதிநிதி இல. குண சேகரன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கல், காலை 11.15மணிக்கு, பகுதி செயலாளர் ந.சீனுவாசன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கல்,

காலை 11.30 பகுதி செயலாளர் குட்டி க.புகழேந்தி ஏற்பாட்டில் இராமலிங்கனார் தெருவில் அறுசுவை உணவு வழங்கல். காலை 11.45மணிக்கு பகுதி செயலாளர் சி.எஸ்.சண்முகம் ஏற்பாட்டில் காந்தி நகரில் அறுசுவை உணவு வழங்குதல். பிற்பகல் 12 மணிக்கு கிரேஸ் மருத்துவமனை முதியோர் இல்லத்தில், மாவட்ட வழக்கறிஞர் சார்பில் அறுசுவை உணவு வழங்கல், பிற்பகல் 12.15 மணிக்கு அயலக அணி ஏ.எம்.பாஷா ஏற்பாட்டில் ஆணாய்பிறந்தான் ஊராட்சியில், குழந்தை இல்லத்தில் அறுசுவை உணவு வழங்குதல். பிற்பகல் 12.30மணிக்கு, திருவள்ளுவர் சிலை அருகில் மாநகர திமுக சார்பில் சி. கே.சசிக்குமார், கோல்டு. பிரபு, மு.ஆனந்தன், ஜமீலா சேட் ஏற்பட்டில் அறுசுவை உணவு வழங்குதல், பிற்பகல் 12.45மணிக்கு பகுதி செயலாளர் பா.ஷெரீப் ஏற்பாட்டில், அண்ணா நுழைவு வாயில் அருகில் அறுசுவை உணவு வழங்கல், பகல் 1.00மணிக்கு தொ.மு.ச., மாநில செயலாளர் க.சௌந்தரராசன் ஏற்பாட்டில் போக்குவரத்து பணிமனையில் அறுசுவை உணவு வழங்கல், பகல் 1.15. மணிக்கு டாஸ்மாக் ஆறுமுகம் ஏற்பாட்டில், டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அறுசுவை வழங்கப்பட்டது. பகல் 1.30 மணிக்கு, கடலைக்கடை சந்திப்பு காலேஜ் கு.ரவி ஏற்பாட்டில் அறுசுவை வழங்கல், பகல் 1.45மணிக்கு, க.பிரகாஷ் ஏற்பாட்டில் செங்கம் சாலை, காளியம்மன் கோயில்அருகில் அறுசுவை உணவு வழங்கல், பிற்பகல் 2.00மணிக்கு வட்ட செயலாளரும், வழக்கறிஞருமான ம.செந்தில் ஏற்பாட்டில் பேகோபுரத் தெரு சந்திப்பில் அறுசுவை உணவு வழங்கல்,

பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொண்டு, மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல் மாறன் அறுசுவை உணவு மற்றும் நலஉதவிகளை வழங்கினார்.

உடன் மாவட்ட துணை செயலாளர் பிரியா ப.விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம்.நேரு, மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி பவர். அன்பரசு, வர்த்தகர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, மாமன்ற உறுப்பினர் அருணாரவி, லக்கி.அரவிந்த், சு.சமயராஜ், ஏ.கே.ரத்தின குமார், கீழ்நாத்தூர் ராஜேந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ், சாம்.ரகுநாத், எம்.எஸ்.டி.மணி, மாநகர விவசாய அணி அமைப்பாளர் மோகன்ராஜ், எஸ். சாதிக், வட்ட செயலாளர்கள் டி.என்.மனோகர், கோல்டு.மஞ்சு, இரா.ராஜாமணி, தே.சஞ்சீவி, சசிகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, திருவண்ணாமலை மாநகர் முழுவதும் நலஉதவிகளுடன் கொண்டாடப்பட்டது. பொதுமக்களுக்கு, மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அறுசுவை உணவுகளை வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், டி.வி.எம்.நேரு, சு.விஜி(எ)விஜயராஜ், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், மண்டி ஆ.பிரகாஷ், ஆ.மோகன்ராஜ், எஸ்.சமயராஜ், ஏ.எம். பாஷா, சாம்.ரகுநாத் உட்பட பலர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய கழக சார்பில் ப.வில்லியனூர் ஊராட்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் V.G.பிரபாகரன், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.